

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று (20.06.2024) அண்ணாசாலை, நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகத்தில் உள்ள தென் சென்னை, இணை 1, சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் பதிவின்போது விரல்ரேகை ஒப்பீடு செய்து ஆள்மாறாட்டத்தை தடுக்கும் மேம்படுத்தப்பட்ட வசதியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், பதிவுத்துறைத் தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (19.06.2024) கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி தலைமையில், கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் 2024–2025 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் மானியக் கோரிக்கை மீதான அறிவிப்புகள் குறித்தும், 2025 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்பட வேண்டிய வேட்டி சேலை இரகம் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறி ஆணையர் கே.விவேகானந்தன் மற்றும் துணிநூல் ஆணையர் முனைவர். மா. வள்ளலார், மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நிகழ்ச்சி நடத்த சென்றுவர – பதிவு செய்துள்ள**

# நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு அரசுப் பேருந்துகளில் 50 சதவிகித கட்டணச் சலுகை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!



*சென்னை, ஜூன் 21-*

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகப் பேருந்துகளில் கலை பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும் நாட்டுப் புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள நாட்டுப் புறக் கலைஞர்கள் மற்றும் இதரக் கலைஞர்கள் தொழில் முறையாக பயணம் செய்யும்போது 50 சதவிகித பயணக் கட்டணச் சலுகையுடன் பயணம் மேற்கொள்ளவும் மற்றும் அவர்களின் இசைக் கருவிகள்/தொழில் கருவிகளை கட்டணமில்லாமல் எடுத்துச் செல்லவும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள சலுகைகளை எந்த தொய்வும் இன்றி முறையாக வழங்கவேண்டும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த ஆகாஷ் என்ற தமிழ்நாடு இசைக் கல்லூரியில் கிராமிய இசை பயிலும் மாணவர், தனது இசைக்கருவியுடன் திண்டுக்கல், வடமதுரையில், தனது நிகழ்ச்சியை முடித்து திரும்பும் போது, திண்டுக்கல்லில் இருந்து மதுரை நோக்கிச் செல்லும் பேருந்தில் தனது இசைக்கருவிகளுடன் பயண அனுமதி மறுக்கப்பட்டது என்று தெரிவித்தார். இது குறித்து நடத்துனரிடம் விசாரணை மேற்கொண்டபோது, அவர் எடுத்துவந்த பொருள் பேருந்தின் உள்ளே லக்கேஜ் கேரியரில் நீட்டிக்கொண்டு இருந்ததால், இது மின் விளக்குகள் மற்றும் பக்கவாட்டு கண்ணாடிகளை உடைத்து விடும் என்பதால், 6 நபர் இருக்கை அருகில் உள்ள இடத்தில் இறக்கி வைக்குமாறு நடத்துநர் கூறியுள்ளார். ஆனால், அவர் தவறான புரிதல் காரணமாக வீடியோ எடுத்துக்கொண்டு தாமாக பேருந்திலிருந்து இறங்கிச் சென்று விட்டதாக தெரிய வருகிறது.

இக்கலைஞர்களுக்கு முழுமையாக சலுகைகளை வழங்கவேண்டும் என்ற நோக்கத்தில் கீழ்க்கண்ட விளக்கம் அளிக்கப்படுகிறது.

தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கலை பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும் நாட்டுப் புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள நாட்டுப் புறக் கலைஞர்கள் மற்றும் இதரக் கலைஞர்கள் தொழில் முறையாக பயணம் செய்யும்போது 50% பயணக் கட்டணச் சலுகையுடன் பயணம் மேற்கொள்ளவும் மற்றும் அவர்களின் இசைக் கருவிகள்/தொழில் கருவிகளை கட்டணமில்லாமல் எடுத்துச் செல்லவும், அரசாணைகள் 1992, 1993, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் நாடகம் மற்றும் கிராமிய கலைஞர்களுக்கு ஏற்கனவே 50 சதவிகித கட்டணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கலைஞர்கள் தங்கள் வாத்தியக் கருவிகள் அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் கட்டணமில்லாமல் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஆடை அணிகலன்கள், ஒப்பனைப் பொருட்கள், இசை வாத்தியக் கருவிகள், ஆர்மோனியம், தபேலா, டோலக், மிருதங்கம், நையாண்டி மேளம், நாதஸ்வரம், பம்பை, உறுமி, உடுக்கை, தவில், கொல்லிக் கட்டை, தப்பாட்டம், மாடு ஆட்டம், மயில் ஆட்டம், காவடி ஆட்டம், கரகம் ஆட்டம், பொய்க்கால் குதிரை மற்றும் இதர சிறிய அளவிலான கருவிகள் பேருந்தில் எடுத்துச் செல்லலாம் என்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டுப் புறக் கலைஞர்கள், இதரக் கலைஞர்கள் மற்றும் இசைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கலைஞர்களின் வாழ்க்கையில் மேலும் முன்னேற்றம் அடையவேண்டும் என்று ஊக்கம் அளித்து, உறுதுணையாக இருக்கும் இந்த அரசு, இந்நிகழ்வை கவனத்தில் கொண்டு, இனி வரும் காலங்களில், இதுபோன்ற ஒரு நிகழ்வுகள் நடைபெறாமல் இருக்கவேண்டும் என்பதற்காக அனைத்து தமிழ்நாடு அரசுப் போக்கு வரத்துக் கழக மேலாண் இயக்குனர்களுக்கும், அதிகாரிகளுக்கும், மற்றும் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நாடகக் கலைஞர்கள் எடுத்து வரும் கலைப் பொருட்கள் பிற பயணிகளுக்கு இடையூறுகள் இல்லாத படி பாதுகாப்பான முறையில் வைக்கப்பட வேண்டும் எனவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

# காலியாக உள்ள மருத்துவப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!



*சென்னை, ஜூன் 21 -*

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (19.06.2024) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக கூட்டரங்கில் அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரியின் 59வது மருத்துவ பட்டப்படிப்பு நிறைவு விழாவில் கலந்து கொண்டு மருத்துவ மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கி, வாழ்த்தி பேசினார்.

அவர் பேசியது வருமாறு:-

அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புதிதாக பி.எஸ்.சி. - ஊடுகதிரியல் (இளங்கலை மற்றும் முதுகலை), பி.எஸ்.சி -இருதயவியல், பி.எஸ்.சி - பார்வை அளவியல், பி.எஸ்.சி - சிறுநீர் பிரித்தல் தொழில்நுட்பம் ஆகிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டு இம்மருத்துவமனை முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவுகிறது. மேலும் இம்மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மொத்த படுக்கை வசதிகள் 1127. மொத்த பிரிவுகள் 32, புறநோயாளிகள் நாளொன்றுக்கு 4520 பேரும், உள்நோயாளிகள் நாளொன்றுக்கு 1048 பேரும் சிகிச்சை பெற்று பயன்பெற்று வருகிறார்கள்.

மேலும் இம்மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்னொரு சிறப்புக்குரிய ஒன்று, தீக்காய அறுவை சிகிச்சைக்கென தனி வார்டு அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏராளமான பொதுமக்கள் பயன்பெற்று வருகிறார்கள். தீக்காயம் ஏற்பட்டவுடன் முதலில் பொதுமக்கள் அணுகும் மருத்துவமனையாக அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உள்ளது.

**அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மருத்துவ வசதிகள்**

ரூ.2.36 கோடி மதிப்பீட்டில் இடைநிலை பராமரிப்பு மையம் கடந்த 22.12.2022 அன்று தொடங்கப்பட்டுள்ளது. மேலும ரூ.2.3 கோடி செலவில் அதிர்வலை சிறுநீரக கல் நீக்க சிகிச்சை மையம் கடந்த 02.05.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கதிரியியக்கவியல் நிறுவனம் 01.07.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறந்த மருத்துவ திட்டங்கள்**

தமிழ்நாட்டின் மருத்துவத்துறை வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவிற்கு மருத்துவப் பணியிடங்களை நிரப்புவதில் வெளிப்படைத் தன்மையுடன் மிகச் சிறப்பான வகையில் நடைபெற்று வருகிறது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னாள் தமிழ்நாட்டில் காலியாக இருந்த 1021 மருத்துவர் பணியிடங்கள் மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் நிரப்பப்பட்டது. அப்படி தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு இந்தியாவிலேயே முதன்முறையாக கலந்தாய்வு நடத்தி அவர்களுக்கு விரும்பும் இடத்திலேயே பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. தற்போது காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்கள் 2,553. இந்த காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு பத்திரிக்கைச் செய்திகளில் விளம்பரம் தரப்பட்டு, மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் விரைவில் நிரப்பப்பட உள்ளது.

மேலும் இந்திய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்து வருகிறது. இதயம் காப்போம் திட்டம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், சிறுநீரகம் காப்போம் திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம், இதுமட்டுமல்லாமல் இந்தியாவிலேயே முதன்முறையாக செயற்கை கருத்தரித்தல் மையம் அரசு மருத்துவமனைகளில் தொடங்கப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் உள்ள செயற்கை கருத்தரித்தல் மையங்களில் சிகிச்சை பெறுவதற்கு அதிக பணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ள செயற்கை கருத்தரித்தல் மையங்களில் கட்டணமின்றி சிகிச்சை அளிக்கப்பட உள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப்பல்கலைக்கழகம் துணைவேந்தர் மரு.நாராயணசாமி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. முத்துச்செல்வன், கலைஞர் நூற்றாண்டு அரசு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, துணை முதல்வர் மரு.செந்தில்குமாரி, மருத்துவமனை கண்காணிப்பாளர், நிலைய மருத்துவ அலுவலர், மருத்துவப் பேராசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# இரயில் விபத்துகளைத் தடுத்திட மூன்று காரணிகளை வலுப்படுத்த வேண்டும்!

## ஒன்றிய ரெயில்வே அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!



*சென்னை, ஜூன் 21-*

மேற்கு வங்கத்தில் கஞ்சன் ஜங்கா இரயில் விபத்தைப் போல, மேலும் விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இது போன்ற விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க மூன்று காரணிகளை வலுப்படுத்த வேண்டும் என்று வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

நான் ஏற்கனவே தங்களுக்கு 5.06.2023 மற்றும் 13.06.2023 முதலான தேதிகளில் எழுதி உள்ள கடிதங்களைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், அக்கடிதங்களில் இரயில்வே கட்டுமானங்களில் பராமரிப்பின்மை, நிதி பற்றாக்குறை, மற்றும் போதிய பணியாளர்கள் நியமிக்கப்படாமல் போன்ற மூன்று காரணங்களால் அடிக்கடி இரயில் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டு இருந்தேன்.

ஆனால் நான் மேலே குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் இன்னமும் தொடர்கின்றன என்பது மிகுந்த வருத்தமளிக்கிறது. மேலும் தற்போது இரயில்வே துறைகளில் பெரிய அளவில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று தெரியவிருக்கின்றேன். இரயில்வே மண்டல பகுதிகளில் ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 வரை பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் ஏப்ரல் மாதத்திலேயே முழுவதுமாக செலவழிக்கப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் இரயில்வே தளவாடங்களில் போதிய பராமரிப்புப் பணிகள் செய்யப்படாமல் உள்ளது. மேலும் வருவாய் செலவினங்களை மூலதன செலவினங்களாக, காட்டும் பழக்கத்தை இரயில்வே மண்டலங்கள் பின்பற்றுவதாகக் கூறப்படுகிறது, இது மிகவும் தவறான முறையாகும். தணிக்கைத்துறை இது குறித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் இரயில்வே துறைகளில் ஏற்பட்டுள்ள ஆட்கள் இல்லாமையால், இரயில்வே தடவாடங்களின் பாதுகாப்பு கருவிகளை இயக்க கூட போதுமான பணியாளர்கள் இல்லை எனவே பாதுகாப்பு பணிகளுக்கான தொழில்நுட்ப பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்ய வேண்டும் என்று எனது முந்தைய கடிதங்களில் குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது இரயில்வே துறை 5700 தொழில்நுட்ப பணியிடங்கள் உட்பட்ட 9000 பணியிடங்களை மட்டும் ஆட்களை பணியமத்துவதற்கு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. மேலும் லோகோ பைலட் பணியிடங்கள் ரயில்வே அமைச்சரின் நேரடி ஆணைப்படி 70 சதவீதப் பணியிடங்கள் குறைக்கப்பட்டு அறிவிக்கை வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இரயில்வே துறையில் 1.8 லட்சம் தொழில்நுட்ப பணியிடங்கள் உட்பட்ட, 2.5 லட்சம் பணியிடங்கள் காலியாக இருப்பதாக, நாடாளுமன்றத்தில் நீங்கள் பேசும் போது தெரிவித்திருந்தீர்கள். அப்படி இருக்கும் போது, வெறும் 9000 பணியிடங்கள் மற்றும் நிரப்புவதற்கு அறிவிக்க வெளியிட்டுள்ளதற்கு காரணம் என்ன?

இரயில்வே தொழில்நுட்ப பிரிவைச் சேர்ந்த பாதுகாப்பு பணியாளர்கள் போதிய அளவில் இல்லாதது தான் அடிக்கடி விபத்துக்கள் நேர்கின்றன. இவற்றில் இரயில்வே பணியில் இருப்பவர்கள் பலர் உயிரிழந்திருக்கின்றனர் மேலும் பொதுமக்களும் உயிரிழந்திருக்கின்றனர். இரயில்வேத் துறை பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியின் மீது கவனம் செலுத்தி போதுமான பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

எனது முந்தைய கடிதங்களில் இரயில்வே துறையின் அவசரக்கால உதவிக்கு தயார் நிலையில் பணியாளர்கள் இல்லாமையால் விபத்துக்கள் நடைபெறும் போது மீட்புக் குழுவினர் விபத்து நடந்த இடத்துக்குச் செல்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது என்று குறிப்பிட்டு இருந்தேன். இப்போது நடைபெற்ற கன்ஜன் ஜங்கா எக்ஸ்பிரஸ் ரயில் விபத்தில் கூட விபத்துப் பகுதியில் பக்ரீத் பண்டிகை நிகழ்வுகளில் ஈடுபட்டிருந்த இஸ்லாமிய சகோதரர்கள், உடனடியாக மீட்பு பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர் என்பதை அறிவோம், ரயில்வே துறையின் மீட்பு படையினர் அங்கு வந்து சேர்வதற்கு இரண்டு மணி நேரம் ஆனதாகக் கூறப்படுகிறது, விபத்து நடந்த இடத்திற்கும் ஜல்பாய்குறி இரயில்வே நிலையத்திற்கும் சுமார் 10 கிலோ மீட்டர் தூரமே உள்ளது, அங்கு வந்து சேர்வதற்கு ஏன் இவ்வளவு தாமதமானது? போதுமான அளவிற்கு தொழில்நுட்ப பணியாளர்கள் தயார் நிலையில் இருந்தால் இந்த காலதாமதம் ஏற்பட்டிருக்காது.

நிலாவில் தென் துருவத்தை ஆராய்வதற்காக நமது நாடு, ஏவுகணை அனுப்பியுள்ளது என்று நாம் பெருமை பேசிக் கொள்ளும் வகையில், நமது நாட்டில் இரயில் பயணிகளின் உயிருக்கும், உடைமைக்கும் நாம் உறுதி செய்யாது இருப்பது நமக்குப் பெரிய அவமானம் என்று நான் கருதுகிறேன், ஜப்பான் நாட்டில் இரயில்கள் மணிக்கு 300 முதல் 350 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கின்றன அங்கு தசாப்தளங்களுக்கு, ஒரு உயிரிழப்பு ஏற்பட்டதை கூட பதிவு செய்யப்படவில்லை. எனவே நாமும், நமது இரயில் பயணிகளுக்கு போதுமான பாதுகாப்பு வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். விரைவில் அந்த குறைகளை நாம் சரி செய்யும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி அக்கடிதத்தில் கூறியுள்ளார்.





நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு தொடர் 101 நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதன்படி பேட்டை பகுதி 18 வது வார்டில் உள்ள நரிக்குறவர் காலனியில் தார்ப்பாயில் வசித்து வரும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த 7 நபர்களுக்கு தற்காலிக வீடு அமைத்துக் கொடுக்கும் நிகழ்வில் மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று துவக்கி வைத்து இனிப்பு வழங்கினார். நிகழ்வில் அப்துல் கையூம், நமச்சிவாயம், மாமன்ற உறுப்பினர் சுப்பிரமணியன், அலிப் மீரான், அவதார் ஷாஜகான், காந்தி, ராபர்ட் செல்லையா, சிவா, வினோத், ராஜா அப்பாஸ் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை சிறப்பாக கொண்டாட முடிவு!

## கழக இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை ஜூன் 21*

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட கழக இலக்கிய அணி முடிவு செய்துள்ளது.

கழக இலக்கிய அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இலக்கிய அணி செயலாளர் வி.பி.கலைராஜன் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலக்கிய அணி நிர்வாகிகள் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்.

மேலும் இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அது வருமாறு:

கழக இலக்கிய அணியின் அவைத்தலைவர் திருமதி. புலவர் இந்திரகுமாரி அவர்களும் இணைச் செயலாளர் கயல் தினகரன் அவர்களும், துணைச் செயலாளர் ஆர். எம்.டி.இரவீந்திரன் அவர்களும், ஆளாத்துயரில் ஆழ்த்தி விட்டு இயற்கை எய்தினர்.

அந்த மூவருக்கும் கலை இலக்கிய அணியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை மக்கள் பயனடையும் விதத்திலும் அவரது தியாகத்தையும் உழைப்பையும் போற்றும் வண்ணும் பெரும்பாலான மாவட்டங்களில் இலக்கிய அணியின் சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகளில் நடத்தப்பட்டன.

அதில் முத்தாய்ப்பாக சென்னை மெரினா கடற்கரையில் மணல் சிற்பம் - அதில் கலைஞர், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின், இளைஞரணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கலைஞர் அவர்களின் ஆட்சி கால சாதனைகள் வண்ணங்களாக சிற்பங்கள் வடிக்கப்பட்டது.

அந்த நிகழ்ச்சியில் முதல்வர் தளபதி அவர்களும், இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தற்கு கழக இலக்கிய அணி நன்றி கூறுகிறது.

மேலும் இன்றைய கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டின் நிறைவு விழாவாக சிறப்பான நிகழ்ச்சி நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தலில் தி.மு. கழக கூட்டணிக்கு 40/40 தொகுதிகளிலும் அமோக வெற்றியைத் தந்திட்ட தமிழ்நாட்டு வாக்காளர் பெருமக்களுக்கு இலக்கிய அணையின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி, மாவட்டந்தோறும் பொது கூட்டங்கள் நடத்துவது என்று மாவட்ட நிர்வாகிகளை இக் கூட்டம் வலியுறுத்துகிறது.

புதுச்சேரி கடற்கரையில், புதுவை மாநிலத்தின் ஓவியர்களைக் கொண்டு 3 கிலோ மீட்டர் அளவிற்கு கலைஞர் அவர்களின் ஓவியங்களையும், கழக அரசின் சாதனைகளையும் வடிவமைத்து கண்காட்சியாக அமைப்பது என்று அம்மாநில இலக்கிய அணி சார்பில் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்**

**எல். பலராமன்**

**ஜூன் 21 (2020)**



**தனது இளம் வயதிலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்**

**வடசென்னை மாவட்டத்தில் வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர் என படிப்படியாக உயர்ந்து மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் ஆட்சியில் இருந்தபோதும் – எதிர்க்கட்சியாக இருந்தபோதும், வடசென்னையில் கழகம் வளர பாடுபட்டவர். வடசென்னையில் முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் ஆகியோர்களை கொண்டு பல பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் சிறப்பாக நடத்திக் காட்டியவர்.**

**கழக தணிக்கைக்குழு உறுப்பினராக பணியாற்றியதுடன், மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக பணியாற்றியவர்.**

**“இவர் பலராமன் அல்ல; ‘பலே ராமன்’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்கள் – ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து நடத்திக் காட்டியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**“கழகப் பணிகள் அனைத்தையும் அமைதியாக, அவர் என்ன மாதிரிப் பணியாற்றுகிறார் என்றே தெரியாத அளவுக்கு அடக்கமாக ஆற்றுவதோடு, அவை அனைத்தையும் நடத்தி முடிப்பார்.” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**